விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 336 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 04 செவ்வாய்க்கிழமை (19.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அநுரவின் புதிய அமைச்சரவை நியமனம்
### இரு தமிழர்கள் உள்ளடக்கம்



15

## அநுர அமைச்சரவையில் முஸ்லிம்கள் இல்லை

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று 21 அமைச்சர்கள் பதவியேற்ற நிலையில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த எவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை.

நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இந்த அமைச்சரவைப் பதவியேற்பு மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.

அமைச்சரவையில் இரண்டு தமிழ் அமைச்சர்கள் இடம்பெற்றபோதிலும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த எவருக்கும் அமைச் 15

## ஜனாதிபதி அநுர டிசம்பரில் இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க டிசம்பரில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். 15

## நாட்டில் டெங்கு அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சுகாதார அமைச்சுதெரிவித்துள்ளது. 15

# எல்லையற்ற அதிகாரத்தை பொறுப்புடன் கையாள்க

### புதிய அமைச்சர்களிடம் ஜனாதிபதி அநுர

- எமது அரசில் வடக்கு, தெற்கு என்ற பிரிவு இல்லை.
- இலங்கையைப் பிளவுபடுத்தும் அரசியலுக்கு முற்றுப்புள்ளி.



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர 16

### கற்கோவளத்தில் அமைந்துள்ள
## இராணுவ முகாமை அகற்றுமாறு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பருத்தித்துறைக் கற்கோவளம் பகுதியில் தனியார் காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு இராணுவ தலைமையகத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்றிலிருந்து (நேற்று) பதின்நான்கு நாட்களுக்குள் குறித்த 15

## பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியை கவனத்திலெடுத்து

### சமநிலை அணுகுமுறையைப் பின்பற்றுக

### ஐ.எம்.எப்பிடம் ஜனாதிபதி அநுர வேண்டுகோள்



(கொழும்பு)

பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை கவ 16

## பெண் சபாநாயகர்?
### அநுர அரசு ஆலோசனை

(கொழும்பு)

பெண் ஒருவரை சபாநாயகராக நியமிப்பது தொடர்பில் அநுர அரசு ஆலோசனை நடத்தி வருகின்றது.

புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு நாளை மறுதினம் 21ஆம் திகதி நடைபெற உள்ளது. காலை 10.00 மணிக்கு சபை அமர்வுகள் ஆரம்பமாகி சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெறும்.

அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிர 15

## இலங்கைக்கான சீனத் தூதுவர் இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான சீனத் தூதுவர் இன்று யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கின்றார்.

பாராளுமன்றத் தேர்தலின் பின்பு 15

### அதிகமான சளி
## வரணியில் ஒரு மாத ஆண் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

அதிகமான சளி ஏற்பட்டதன் காரணமாக வரணியில் ஒரு மாத ஆண் குழந்தை ஒன்று மரணமடைந்துள்ளது.

இதில் வரணி வடக்கு, வரணியைச் சேர்ந்த வேணுதன் பிரித்தி என்ற ஒரு மாத ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைகளை பொறுப்பேற்ற பிரதமர் ஹரிணி அமரசூரிய



இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 17வது பிரதமராக ஹரிணி அமரசூரிய நேற்று (18) பிற்பகல் பிளவர் வீதியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கையின் பெண் பிரதமர்களாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைத் தொடர்ந்து மூன்றாவது பெண் பிரதமராக தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நினைவேந்தல் தொடர்பில்
# ஜனாதிபதியின் கையொப்பத்துடன் சமூக ஊடகங்களில் போலி அறிக்கை

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டதாக சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வரும் அறிக்கை போலியானது என மக்கள் விடுதலை முன்னணி கட்சியின் ஊடகத் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

குறித்த அறிக்கையானது ஜனாதிபதியின் கையொப்பத்துடன் சமூக வலைத்தளங்களில் அதிகம் பதிவிடப்பட்டு வருகிறது.

இந்த ஊடக அறிக்கையில் போரின் போது உயிர் நீர்த்தவர்களை நினைவு கூருவது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் போரின் போது உயிர்நீர்த்தவர்களை நினைவு கூருவதில் தமிழ் சமூகம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல் அவ்வாறு எவ்வித தொந்தரவுகளும் இன்றி நினைவு கூர சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் அரசாங்கத் தரப்பு எவ்வித அதிகாரபூர்வ தகவல்களையும் வெளியிடவில்லை.

இதேவேளை, போலி அறிக்கை தொடர்பில் தேசிய ஊடகங்கள் எவையும் தகவல் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கல்விப் பொது உயர்தர பரீட்சையை முன்னிட்டு
## பாடசாலைகளுக்கு விடுமுறை

பாடசாலை மூன்றாம் தவணைக்கான முதல் கட்ட விடுமுறையை நவம்பர் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்விப் பொது உயர்தர (GCE) (A/L) பரீட்சை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி மூன்றாம் தவணையின் 2ஆம் கட்டம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த கட்டம் ஜனவரி 17 ஆம் திகதி நிறைவடையும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

# அநுர அரசில் அமைச்சர்களுக்கு சம்பளம் வழங்கப்படாது
## சுசந்த குமார எம்.பி

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம் கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் சம்பளம் பெற்றுக் கொள்ளாது தமது கடமைகளை முன்னெடுக்க ஆயத்தமாக உள்ளனர் என கட்சியின் அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த குமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான ஆரம்ப இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த 76 வருடங்களாக மகிழ்ச்சியாக வாழ்வது என்பது மக்களுக்கு வெறும் கனவாக காணப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் கூறுவது போன்று தற்போதைய அரசாங்கம் குறுகிய காலத்தில் விழுந்து விடாது என சுசந்த குமார மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)


9ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 02 . 1952

மறைவு 29 . 11 . 2015

திருமதி தர்மலக்ஷ்மி சூரியகுமார்

திதி : சங்கடகர சதுர்த்தி

அன்பின் திருவுருவே எங்கள் அம்மாவே
எமைப் பத்து மாதம் சுமந்து பாரினிலே
சீருடன் வாழ வழி காட்டிய அன்னையே
எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
சாயீசன் பதமடைந்து ஆண்டுகள் ஒன்பது
ஆனதுவோ அம்மா!
எத்தனை எத்தனை ஆண்டுகளானாலும்
என்றும் எம் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும்
எம் அன்னைக்கு எமது இதய அஞ்சலிகள் (549)

72, அச்சுக்கூட வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுடனேயிருக்கும்
ந. சூரியகுமார் (கணவர்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்


# வட மாகாண ஆளுநரை சந்தித்த வட பிராந்திய கட்டளைத் தளபதி



வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை இலங்கைக் கடற்படையின் வட பிராந்திய கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் துஷார கருணதுங்க நேற்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது யாழ். தீவுப் பகுதி மக்களின் கடல் போக்குவரத்து மற்றும் தீவுகளில் வசிக்கும் மக்களுக்கான வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கைக் கடற்படை முன்னெடுத்துள்ள செயற்பாடுகளின் முக்கியத்துவம் தொடர்பாக ஆராயப்பட்டது. (ம-7,33)


## பதவி வெற்றிடம்

| | | |
|---|---|---|
| பதவி | : | அலுவலக உதவியாளர் |
| வெற்றிடம் | : | 01 |
| சம்பளக் குறியீடு | : | 317/16 |
| சம்பள அளவுத் திட்டம் | : | 16 975 - 135 x 10 - 150 x 10 19 825 (02/2022 இன்படி) |

**கல்வித் தகைமை**

கூட்டுறவுப் பணியாளர் 17 வது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவம்

அல்லது

கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப் பத்திரம் / 8ம் தர கல்விச் சான்றிதழ்

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சுயமாகத் தயாரித்து கல்வித் தகைமை சான்றிதழ்களின் பிரதியுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு தலைவர், யாழ். குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம், பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு எனும் முகவரிக்கு 29.11.2024 ம் திகதி நண்பகல் 12 மணிக்குமுன் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(C-1613)

யாழ். குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அமைச்சரவை



ஜனாதிபதி
அநுரகுமார திசாநாயக்க
பாதுகாப்பு,நிதி,திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, டிஜிற்றல் பொருளாதார அமைச்சா



பிரதமர் கலாநிதி
ஹரிணி
அமரசூரிய
கல்வி,உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சா



விஜித ஹேரத்
வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சா



பேராசிரியர்
சந்தன அபேரத்ன
பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்



சட்டத்தரணி
ஹர்சன நாணயக்கார
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சா



சரோஜா
சாவித்திரி போல்ராஜ்
மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர்



கே.டி லால் காந்த
விவசாயம், கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்



அநுரகருணாதிலக
நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்



ராமலிங்கம்
சந்திரசேகர்
கடற்றொழில் மற்றும் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்



பேராசிரியர்
உபாலி பன்னிலகே
கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சா



சுனில் ஹந்துன்னெத்தி
கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்



ஆனந்த விஜேபால
பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்.



டொக்டர் நளிந்த
ஜெயதிஸ்ஸ
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்



பிமல் ரத்நாயக்க
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சர்



பேராசிரியர்
ஹினிதும சுனில்
செனவி
புத்தசாசன சமய, மற்றும கலாசார அலுவல்கள் அமைச்சர்



வசந்த சமரசிங்க
வர்த்தக,வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்



சமந்த வித்யாரத்ன
பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர்



சுனில் குமார கமகே
இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்



பொறியியலாளர்
குமாரஜயகொடி
வலுசக்தி அமைச்சர்



பேராசிரியர்
கிரிசாந்த அபேசேன
விஞ்ஞான, தொழில் நுட்ப அமைச்சர்



பேராசிரியர்
அனில்ஜயந்த பெர்ணான்டோ
தொழில் அமைச்சர்



டொக்டர்
தம்மிக ப[illegible]
சுற்றாடல் அமைச்சர்

# புலமைப் பரிசில் பெறுபேறு வெளியிட தடை உத்தரவு!

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இடைக்கால தடை விதித்து உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்ட விதத்தை சவாலுக்குட்படுத்தி அதில் பங்குபற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலித்ததன் பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரிதி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் மகிந்த சமயவர்தன ஆகிய நீதியரசர்கள் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (நி-8)

# மீண்டும் கூடும் தேர்தல்கள் ஆணைக்குழு

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் இறுதித் தீர்மானம்

(கொழும்பு)

**பொதுத் தேர்தல் நிறைவடைந்ததையடுத்து இம்மாதம் 27 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூடுகின்றது. இச்சந்திப்பில் உள்ளூராட்சி தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

தற்போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் கலந்துரையாடுவதே இந்த சந்திப்பின் முக்கிய நோக்கமெனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்களுக்கான நிதித் தேவையை பாராளுமன்றத்தில் முன்வைக் கவுள்ள இடைக்கால பாதீட்டுத் திட்டத்தில் உள்ளடக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இடைக்கால பாதீட்டுத் திட்டம் டிசெம்பர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதுடன் தேர்தலுக்குப் பணம் ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டாலும், தேர்தல் திகதி குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லையெனவும் இந்த கூட்டத்தில் தேர்தல் திகதி குறித்து முடிவு எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

## உயர்தர மாணவர்களுக்கான

# மேலதிக வகுப்புகளுக்கு இன்றுடன் தடை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் நிறை வடைய வேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆலோசனைகளை பின்பற்றாத வர்கஞக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் டிசெம்பர் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை, 333,185 மாணவர்கள் பரீட்சார்த்திகளாக பதிவு செய்துள்ள நிலையில் அவர்களில் 253,390 பாட சாலை பரீட்சார்த்திகளும் 79,795 தனியார் பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர். (நி-8)

# தமிழில் சத்தியப் பிரமாணம் செய்த அமைச்சர்

(கொழும்பு)

புதிய அமைச்சரவை பதவியேற்பின் போது இராமலிங்கம் சந்திரசேகர் தமிழ் மொழியில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள இராமலிங்கம் சந்திரசேகர் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வள அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டுள்ளார்.


இதன்போது தமிழ் மொழியில் இராமலிங்கம் சந்திரசேகர் சத்தியபிரமாணத்தை செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# இந்த முறை மிஸ் ஆகாது அஸ்வினுக்கு ஸ்மித் சவால்






அஸ்வின் பந்துவீச்சை எதிர்கொள்வதற்காக அஸ்வினை போலவே பந்துவீசும் ஒருவரை வைத்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார் ஆஸியின் துடுப்பாட்ட வீரர் ஸ்டீவ் ஸ்மித். இது குறித்து ஸ்டீவ் ஸ்மித் கூறியதாவது. 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடும் போது, ஒரு வீரர் மீது இன்னொரு வீரர் ஆதிக்கம் செலுத்த அதிக வாய்ப்புகள் உள்ளது.

ஏனென்றால் 10 இன்னிங்ஸில் அந்த இரு வீரர்களும் நேரடியாக மோதுவார்கள். அப்படியான மோதல் ஏற்படும் போது மன தளவிலும் பல்வேறு சவால்களை நாம் சந்திக்க நேரிடும்.

சில நேரங்களில் அந்த பவுலரிடம் ஒரு பட்ஸ்மன் விரைவாக விக்கெட்டை பறி கொடுத்தால், அந்த பட்ஸ்மனுக்கு இயல்பாகவே அழுத்தம் அதிகரிக்கும். 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஒழிந்து கொள்வதை போல், 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் யாராலும் தப்பிக்க முடியாது.

கடந்த சில ஆண்டுகளாகவே எனக்கும் அஸ்வினுக்கும் இடையில் நல்ல மோதல் இருக்கிறது. அடிலெய்ட் மற்றும் எம்சிஜி மைதானத்தில் அஸ்வின் எனது விக்கெட்டை எடுத்தது இப்போதும் நினைவில் இருக்கிறது. அதில் எம்சிஜியில் லெக்ஸ்லிப் திசையில் விக்கெட்டை எடுத்திருந்தார். அவுஸ்திரேலியா மண்ணில் ஆஃப் ஸ்பின்னர்களிடம் ஆட்ட மிழப்பதே எனக்கு பிடிக்காது. வலதுகை பட்ஸ்மன்களால் ஆஃப் ஸ்பின்னர்களை எளிதாக சமாளிக்க முடியும். ஆனால் அஸ்வின் மிகச்சிறந்த பவுலர். அவரும் நிச்சயம் சிறந்த திட்டங்களுடன் வருவார்.

கடந்த சீசனில் 2 போட்டிகளில் அஸ்வின் என்னை ஆதிக்கம் செலுத்தினார். அதேபோல் எஸ்சிஜி மைதானத்தில் கொஞ்சம் முன் னெச்சரிக்கையுடன் விளையாடி அஸ்வின் மீது என்னால் ஆதிக்கம் செலுத்த முடிந்தது. அதனால் இம்முறையும் முன்னெச்சரிக்கையாக இருப்பதே திட்டமாக உள்ளது. அவரை செட்டிலாகவிடாமல் ஒரே லெந்தில் வீச விடாமல் தடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.(6-8)

# 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி



நியூசிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

கண்டி - பல்லேகலை சர்வதேச விளையாட்டரங்கில் இடம்பெற்ற குறித்த போட்டி மழை காரணமாக 47 ஓவர்களாக மட்டுப்படுத் தப்பட்டிருந்தது.

இதன்படி, போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 45.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பின்னர் 210 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 46 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றி இலக்கை கடந்தது. (6-8)

# பங்களாதேஷ் டெஸ்ட் தொடர் மே.இ.தீவுகள் அணி அறிவிப்பு


பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது.

கிரைக் பிராத்வெயிட் (கப்டன்), ஜோஷ்வா டா சில்வா (துணைக் கப்டன்), அலிக் அதனாஸ், கீஸி கார்ட்டி, ஜஸ்டின் கிரீவ்ஸ், காவெம் ஹாட்ஜ், டெவின் இம்லாக், அல்ஸாரி ஜோசப், ஷமர் ஜோசப், மிக்கில் லூயிஸ், ஆண்டர்சன் பிளிப், கிமர் ரோச், ஜேடன் சீல்ஸ், கெவின் சின்க்ளேர் மற்றும் ஜோமல் வாரிக்கேன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

டெஸ்ட் தொடர் விபரம்

முதல் டெஸ்ட்-ஆண்டிகுவா, நவம்பர் 22 - நவம்பர் 26 ஆம் திகதி வரையும் இரண்டாவது டெஸ்ட் ஜமைக்கா, நவம்பர் 30 டிசெம்பர் 4 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சபாநாயகராக நிஹால் கலப்பத்தி?

(கொழும்பு)

புதிய அமைச்சரவையின் பாராளுமன்ற சபாநாயகராக நிஹால் கலப்பத்தியை நியமிக்கத் தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களைக் கைப்பற்றி பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

இதன்படி, புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை நேற்றுக் காலை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டது.



இந்த நிலையில், அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத் திற்குத் தெரிவாகியுள்ள நிஹால் கலப்பத்தியை புதிய பாராளுமன்ற சபாநாயகராக நியமிக்கத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1994 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றத்திற்கு பிரவேசித்த நிஹால் கலப்பத்தி இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 125,983 வாக்குகளைப் பெற்று அந்த மாவட்டத்திலிருந்து அதி கூடிய வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# கடமைகளைப் பொறுப்பேற்றார் வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்ட வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் கடமைகளைப் பொறுப் பேற்றுக்கொண்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சர் ஹேரத் 2000 ஆம் ஆண்டு முதல் கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் சமீபத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல் வரலாற்றில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

அமைச்சர் ஹேரத் முன்னர் கலாச்சார விவகாரங்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சராகவும் பணியாற்றியதுடன் அமைச்சர் ஹேரத் களனிப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)



## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1944-09-09 உதிர்வு 2024-11-16



எமது நிலையத்தின் முன்னாள் உபதலைவரும் ஆயுட்கால அங்கத்தவருமாகிய

**அமரர். வைத்திலிங்கம் சச்சிதானந்தம்**

அவர்களின் மறைவிற்கு எமது இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

(C-1608)

பிரிவுத்துயருடன்...

நிர்வாகசபை, தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு.

## பொது அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

1972 ஆம் இலக்க 17/06/2016 ஆம் திகதிய வர்த்தமானி பிரசுரத்திலுள்ள சபைக்குச் சொந்தமான, தாவடி J/194 கி சே, பிரிவிலுள்ள மயான வீதியின் 3 ஆம் ஒழுங்கைக்கு "உழவர் வீதி" எனப் பெயர்சூட்டுமாறு அப்பகுதிமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எமது சபையை கோரியுள்ளன.

விபரங்கள் வருமாறு

தற்போதைய பெயர் :- மயான வீதியின் 3 ஆம் ஒழுங்கை. வீதி இலக்கம்:-NJVSE 085

சூட்டப்படவுள்ள பெயர்:- "உழவர் வீதி". நீளம்:- 380 மீற்றர், அகலம் :- 4 மீற்றர்.

வீதியின் ஆரம்பம் :- வன்னிய சிங்கம் வீதி. வீதியின் முடிவு :- மயான வீதி.

எனவே இவ்வீதி பெயர் தொடர்பில் ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 02/12/2024 ஆம் திகதிக்குள் செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சாரதா உருத்திரசம்பவன்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி-1611)

# இராசிபலன்

19.11.2024
கார்த்திகை 4, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 9.38 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 7.36 மணிவரை

சுபநேரம் -10.39-12.09 மணிவரை
இராகுகாலம் -3.09-4.39 மணிவரை

சங்கடஹர சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம்.
விசாகம் , அனுசம்

வள்ளுவன்

**மேஷம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், நண்பர்கள் சந்திப்பால் சுப விரயங்கள் கூடும் நாள், வழிபாடு இன்பம் தரும்.

**துலாம்** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் வளர்ச் சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தடைகள் விலகிதன வரவுகள் வந்து கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**ரிஷபம்** நிதி நிலை உயரும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சிம்மம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வரவும் சமமாகும் நாள், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், பிரயாண பயமுண்டு.

**கும்பம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** குடும்ப செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயண மொன்று உருவாகலாம், உள்ளத் திலும் இல்லத்திலும் அமைதிகூடும் நாள்.

**கன்னி** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், தூரதேச செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தவறான தீர்மானங்கள் தவறான விளைவுகளைக் கொண்டு வரும்.**

# தேர்தல் முடிவுகளை ஏற்று முன்னோக்கிச் செல்வோம்

## டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் ஈ.பி.டி.பி. கட்சியின் அடுத்த கட்ட நகர்விற்கு சிறந்த வலுவூட்டலை தந்துள்ளது என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். தலைமையகத்தில் நேற்று முன்தினம் கட்சிப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மன வலிமையோடு எமக்கு வாக்களித்த மக்களுக்கும் வாக்களிக்க நினைத்திருந்த மக்களுக்கும் நன்றியையும் இந்த தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவிற்கான காரணங்களை கட்சி செயற்பாட்டாளர்கள் ஒவ்வொருவரும் சுயவிமர்சனம் செய்து திருத்திக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தை நோக்கி இன்னமும் வலிமையுடன் பயணிக்க தயாராக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அலைகள் அடித்தாலும் கார்முகில்கள் சூழ்ந்தாலும் எமது கடும் பயணம் ஒருபோதும் நிற்பதில்லை என்றும் எந்தப் பின்னடைவுகளும் ஓரடி பின்னால் ஈரடி முன்னால் இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (6.8-33)

# இலச்சார்ச்சனைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் -மருதனார் மடம், சுன்னாகம் அருள்வள்ர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என ஆதீன கர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரரேஸ்வரக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-8)

# சத்திரசிகிச்சை கூடத்திற்கு தளபாடங்கள் வழங்கி வைப்பு



(சாவகச்சேரி)

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினால் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு ஒரு தொகுதி தளபாடங்கள் வழங்கி வைக்கப்படடுள்ளன.

கடந்த 27.09.2024 தொடக்கம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினரால் மேற்படி முதற்கட்ட உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

# கைதடியில் மரநடுகை

(சாவகச்சேரி)

விதைப்பதும்- முளைப்பதும் கார்த்திகையில் என்ற தொனிப் பொருளில் பசுந்தேசம் அமைப்பும்- இயற்கையின் நண்பர்கள் அமைப்பும் இணைந்து மரநடுகைச் செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன் ஓர் அங்கமாக நேற்று முன்தினம் கைதடி ஆயுர்வேத போதனா மருத்துவமனை முன்றலில் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டிருந்தன.

மரநடுகை நிகழ்வில் கைதடி மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

# வலி.கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுசரணையில் வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவை நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலரும் பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் பிரதீபன், சிறப்பு விருந்தினராக வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி.லாகினி நிருபராஷ், கௌரவ விருந்தினர்களாக புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் மற்றும் 2022 ஆம் ஆண்டின் மாகாண விருதுக் கலைஞர் கலைக்குரிசில் வடிவேலு பாலச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை 2 மில்.அடையும்

## சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் இலக்கிடப்பட்ட 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை இலங்கை அடையும் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.


கடந்த மாதம் அறுகம்பை பகுதிக்கு விடுக்கப்பட்டிருந்த தாக்குதல் எச்சரிக்கையைத் தொடர்ந்து இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்திருந்தது.

குறித்த எச்சரிக்கையைத் தொடர்ந்து பல நாடுகள் இலங்கைக்கான பயண ஆலோசனையைப் புதுப்பித்திருந்ததுடன் சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், ஒப்பீட்டளவில் இந்த மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகைதந்துள்ள சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சுற்றுலாத் தக வல்கள் தெரிவிக்கின்றன. (6-8)

# கொழும்பில் தமிழர் பிரதிநிதித்துவம் இழப்பு

## வருத்தமளிக்கிறது மனோ



(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்ட தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய் விட்டதைக் கண்டு மன வருத்தம் அடைகின்றேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்

இது தொடர்பில் அவரால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டின் தேசிய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற கொழும்பு தலைநகர் மாவட்டத்தில், தமிழர் பிரதிநிதித்துவத்தை இரட்டிப்பு ஆக்க நமது கட்சி எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை. இன்று இருந்த ஒரு தமிழர் பிரதிநிதித்துவமும் இல்லாமல் போய் விட்டது. இதையிட்டு நான் மன வருத்தம் அடைகின்றேன்.

அடித்துள்ள அரசியல் அலையின் மத்தியிலும் நாடெங்கும் மக்கள், எமது வேட்பாளர்கள் போட்டியிட்ட ஏழு மாவட்டங்களில் 2 லட்சத்து 37 ஆயிரத்து 123 விருப்பு வாக்குகளை எமது வாக்காளர்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு வழங்கி உள்ளார்கள். அவர்களுக்கு விசேட நன்றிகள்.

கொழும்பு தலைநகர் மாவட்டத்தில், இருந்த தமது இரண்டு பிரதிநிதித்துவங்களை தக்க வைத்து கொண்டு, இன்று அதை மூன்றாக அதிகரித்தும் கொண்ட, தமிழ் பேசும் சகோதர முஸ்லிம் உடன் பிறப்புகளுக்கு எனது இதய பூர்வ பாராட்டுகள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8)

# குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 5 நாடகங்களின் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையினர் ஏற்பாட்டில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 5 நாடகங்களின் நூல் வெளியீடு நாளை இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில்.கலாநிதி எஸ் . கே. கண்ணதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் கலாநிதி பாக்கியநாதன் அகிலன், கலாநிதி மகேந்திரன் திருவரங்கன் மற்றும் ஜோண்சன் ராஜ்குமார் ஆகியோர் உரைகள் நிழ்த்தவுள்ளனர். (6-8)

# வளவாளர்களுக்கான விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசனம், மத அலுவல்கள், கலாசார அமைச்சின் கீழ் செயற்படுகின்ற பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் 2025 ஆம் அண்டிற்கான திறன் அபிவிருத்தி பாட நெறிகளான கர்நாடக சங்கீதம், பரதம், சித்திரம், யோகாசனம், சிங்களம், மிருதங்கம், நாடகம், ஆங்கிலம் ஆகிய நெறிகளிற்கான வளவாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

வளவாளர்களாக இணைய விரும்புவோர் தி.சுகிர்தன் நிலையப் பொறுப்பதிகாரி புற்றளை . புலோலி எனும் முகவரிக்கு எதிர்வரும் 27.11.2024 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ள்னர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அமைச்சரவையில் இரண்டு தமிழர்கள்



(கொழும்பு)

இலங்கையின் புதிய அமைச்சரவையில் நேற்று இரண்டு தமிழ் அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும், சரோஜினி சாவித்திரி போல்ராஜ் ஆகியோரே நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண் டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்நிகழ்வில் கடற்றொழில், நீரியல் வள மற்றும் கடல் வளங்கள் அமைச்சராக இராமலிங்கம் சந்திரசேகரும், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சராக சரோஜி சாவித்திரி போல்ராஜும் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட னர்.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் 141 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகவும் 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் ஊடாகவும் தெரிவான நிலையில் மொத்தமாக 159 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ரவி கருணாநாயக்கவுக்கு தேசியப் பட்டியல் ஆசனம்

(கொழும்பு)



நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் படி, புதிய ஜனநாயக முன்னணிக்கு (சிலிண்டர்) இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்திருந் தது. அதற்கமைய குறித்த தேசியப் பட்டியலுக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க பெயரிடப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், மற்றைய தேசிய பட்டியல் உறுப்பினர் தெரிவு குறித்து விரைவில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவுள்ளதாக தெரியவருகிறது.

2024 பொதுத் தேர்தலில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி 500,835 வாக்குகளைப் பெற்று 2 தேசியப் பட்டியல் ஆசனங்களைக் கைப்பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பதவியேற்கப்போகும் பிரதி அமைச்சர்கள்

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் பிரதி அமைச்சர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை பதவியேற்கவுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

பிரதமர் மற்றும் ஏனைய முக்கிய அமைச்சர்களின் நியமனம் அடங்கிய புதிய அமைச்சரவை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (நி-8)


## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள்
## பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
## வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள்
## சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை-2024/2025

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01 | H/LS/2024/01 தொடக்கம் 10வரை | அழுக்குதுணிகள் சலவைச் சேவை | (அ) பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (ஆ) சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சை கூடம் | 10,000.00 |
| | | | (இ) கோப்பாய், அச்சுவேலி, பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் | 3000.00 |
| | | | (ஈ) நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் , பிரதேசத்திற்குட்பட்ட , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 3.000.00 |
| | | | (உ) காரைநகர் பிரதேச வைத்தியசாலை | 3.000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற் கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலை மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

    அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கல் சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்குத் தகைமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 0212223725,0212226253,0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமிழ் மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் 19 நவம்பர் 2024 ஆம் திகதி தொடக்கம் 29.11.2024 ஆம் திகதி வரை 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 29 ஆம் திகதி நவம்பர் 2024 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 25 ஆம் திகதி நவம்பர் 2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடை பெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலக காசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ்விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966**
**தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்:** rdhsjaffna 15@gmail .com

(சி-1612)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமைச்சர்களின் வீடுகளுக்கு தீ மணிப்பூரில் பதற்றம்!

### தீவிரவாதிகளால் கடத்தப்பட்டவர்களின் உடல்கள் மீட்பு



(டில்லி)

மணிப்பூரில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 6 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட சில மணி நேரத்தில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் முதல்வர், எம்எல்ஏக்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மணிப்பூரில் ஆயுதம் தாங்கிய குகி தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதாக கூறப்படும் ஆறு பேரில் ஒரு பெண் மற்றும் 2 குழந்தைகளின் உடல்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு, ஜிரிபாம் மாவட்டத்தில் உள்ள போரோ பெக்ராவில் இருந்து 16 கி.மீ. தொலைவில் கண்டெடுக்கப்பட்டன. மேலும் 3 பேரின் உடல்கள் சனிக்கிழமை பிற்பகல் கண்டெடுக்கப்பட்டன. அழுகிய நிலையில் காணப்பட்ட உடல்கள், பிரேதப் பரிசோதனைக்காக எஸ்எம்சிஎச் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மணிப்பூரில் மீண்டும் போராட்ட பதற்றம் வெடித்தது. இந்நிலையில் அமைச்சர்கள் சபம் ரஞ்சன், எல். சுசிந்த்ரோ சிங் மற்றும் ஒய்.ஹேமசந்த் ஆகியோரின் வீடுகளை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் இம்பால் மேற்கு மற்றும் கிழக்கு, பிஷ்னுபூர், தவுபால் மற்றும் கக்சிங் ஆகிய ஐந்து மாவட்டங்களில் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## புதிய நிர்வாகத்துடன் செயற்படத் தயார்

### ஜோ பைடனிடம் சீன ஜனாதிபதி



(லிமா)

அமெரிக்காவில் புதிதாக அமைய உள்ள நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராக உள்ளோம். ஆனால் தகுந்த முடிவை புதிய நிர்வாகம் எடுக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடனான சந்திப்பின் போது, சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

தென் அமெரிக்க நாடான பெருவில், ஆசியா - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு நடந்து வருகிறது.

இந்த மாநாட்டுக்கு இடையே, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை, சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். அமெரிக்காவில் சமீபத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். அடுத்தாண்டு ஜனவரி 20 இல் அவர் பதவியேற்க உள்ளார். தேர்தல் வெற்றிக்காக ட்ரம்புக்கு, சீன ஜனா திபதி ஷீ ஜின்பிங் வாழ்த்து தெரிவித்திருந்தார்.

டொனால்ட் ட்ரம்ப் முன்பு ஜனாதிபதியாக இருந்தபோது, சீனா வுக்கு எதிரான கொள்கையில் தீவிரமாக இருந்தார். அவருக்கு அடுத்து ஜனாதிபதியான ஜோ பைடன், அந்தக் கொள்கையை தளர்த்தினார். இருப்பினும், சீனாவுடனான உறவில் சிறு விரிசல் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## விநோத தாக்குதலை தொடுத்த வடகொரியா

(பியாங்யாங்)

வடகொரியா தென்கொரியாவைக் குறிவைத்து மிக விநோதமான தாக்குதலை முன்னெடுத்துள்ளது.

இராணுவம், ஏவுகணை போன்றவை வடகொரியா நடத்தும் இந்த உளவியல் தாக்குதலில் தென்கொரிய எல்லையோர கிராமம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே பல காலமாகவே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இதனால் இரு கொரிய நாடுகளின் எல்லைகள் பதற்றமாகவே இருக்கும். இதற்கிடையே தென்கொரியாவில் விநோதமான தாக்குதலை வடகொரியா நடத்தி இருக்கிறது.

தென் கொரியா எல்லையில் அமானுஷ்யமான, விநோதமான ஒலிகளை இப்போது வட கொரியா ஒலிபரப்பி வருகிறது.

இது தென்கொரியக் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைக்கும் வகையில் இருப்பதாகப் புகார்கள் எழுந்துள்ளன.

எல்லையில் உள்ள டாங்



சன் என்ற கிராமத்தைக் குறிவைத்துத் தான் வட கொரியா இதைச் செய்து வருகிறது.

அங்கு கார் விபத்துகள் ஏற்படுவது போன்ற சத்தம், பேய் அலறுவது என்று தொடர்ச்சியாக விநோதமான சத்தங்களை ஒலிப் பெருக்கியில் போட்டு வட கொரியா ஒலிபரப்புகின்றது.

இது அங்குள்ள கிராம மக்களைக் கடுமையாகப் பாதிக்கிறது. அப்பகுதி மக்கள் மேலும் கூறுகையில், "பல மாதங்களாகவே தொடர்ந்து இதைச் செய்து வருகிறார்கள். முன்பாவது மனித ஒலிகளைத் தான் எழுப்பினார்கள். அதைச் சற்று சமாளிக்கும் வகையில் இருந்தது.

ஆனால், இப்போது பேய் சத்தம், உலோகங்கள் மோதும் சத்தம் என எல்லை மீறிப் போகிறார்கள்" எனத் தெரிவித்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையே அமைதியை ஏற்படுத்தும் வகையில் அமெரிக்கா பேச்சுவார்த்தைக்கு உதவியது.

இருப்பினும் இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்க முடியாது என்று வட கொரியத் தலைவர் கிம் ஜாங் உன் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து எல்லையில் பதற்றம் அதிகரித்தது. முதலில் தென் கொரியா தனது நட்பு நாடுகளுடன் போர்ப் பயிற்சி செய்தது.

அதன் பிறகே எல்லையில் விநோத தாக்குதல்கள் நடக்கத் தொடங்கின. முதலில் வடகொரியாவில் இருந்து தப்பி வந்தவர்கள் குறித்த விவரங்கள் அடங்கிய நோட்டீஸ்களை தென் கொரியா வீசியது.

அதற்குப் பதிலடியாக வடகொரியா குப்பைகள் நிரப்பப்பட்ட பலூன்களை தென்கொரியா மீது அனுப்பி வெடிக்கச் செய்தது.

அதன் பிறகு தென் கொரியா எல்லையில் ஒலிப் பெருக்கி வைத்துப் பாடல்களை ஒலிபரப்ப தொடங்கியது. ஆனால் உளவியல் ரீதியாகத் தாக்க மோசமான சத்தங்களை வடகொரியா ஒலிபரப்பி வருவது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## தாக்க...

## பதிலடி...

## 72...

(ஜெருசலேம்) —

இஸ்ரேலின் பி...

மேற்கொள்ளப்பட்...

கொடுக்கும் முகம...

பகுதிகளில் இஸ்...

தாக்குதல்களை நட...


குறித்த தாக்குதல் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாலஸ்தீனத்தில் வடக்கு காசாவின் பெய்ட் லாஹியாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எ... வி... லி... ந... ய... செ...

## உக்ரைனின் வ...

## ரஷ்யா கடும் ...



(கீவ்)

உக்ரைனின் வலுசக்தி உட்கட்டமைப்பை இலக்குவைத்து ரஷ்யா கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

ரஷ்யாவின் இந்த தாக்குதல் காரணமாக பொதுமக்களின் கட்டடங்களும் தாக்கப்பட்டுள்ளன.

உக்ரைனின் அனைத்து பிராந்தியங்களின் மீதும் மேற்கொள்ளப்பட்ட பாரிய கூட்டு தாக்குதலின் போது 120 ஏவுகணைகளையும் 90 ஆளில்லா விமானங்களையும் ரஷ்யா பயன்படுத்தியது

எ... த... வ... எ... த... தி... எ... மீ... ப... அ... ப...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பட்ட நெதன்யாகு வீடு!

# டியை ஆரம்பித்தது இஸ்ரேல்


## 2 பேர் இதுவரை உயிரிழப்பு

**பிரதமர் இல்லத்தின் மீது ப்பட்ட திடீர் தாக்குதலுக்கு பதிலடி முகமாக லெபனானின் தலைநகர் இஸ்ரேல் தொடர் வான்வழித் ா நடத்த ஆரம்பித்துள்ளது.**

இதில் 72 பேர் உயிரிழந்துள்ளதாக காசா அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.


முன்னதாக வடக்கு இஸ்ரேலில் செசாரியா பகுதியில் அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் இல்லத்தின் மீது நேற்று வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் 16 ஆம் திகதி நெதன்யாகுவின் வீட்டைக் குறிவைத்து ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் தற்போது 2 ஆவது தாக்குதல் நடந்துள்ளது.



இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் காசா குடியிருப்பு கட்டடம் மீது தற்போது தாக்குதல் நடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. (நி-8)

## வலுசக்தி மீது ...ம் தாக்குதல்



என தெரிவித்துள்ள உக்ரைன் தனது நாட்டின் மேற்கு பகுதி வரை ஏவுகணைகள் சென்றன என குறிப்பிட்டுள்ளது.

உக்ரைனின் மிகப்பெரிய தனியார் வலுசக்தி நிறுவனத்திற்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

வலுச்சக்தி உட்கட்டமைப்பின் மீதான தாக்குதல் காரணமாக சில பகுதிகள் தொடர்ந்தும் மின்சாரம் அற்ற நிலையில் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-8)

## புதிய சாதனை படைத்த டைட்டானிக் கப்டனின் கடிகாரம்

(லண்டன்)

டைட்டானிக் கப்பலில் சென்ற பயணிகள் 700 பேரைக் காப்பாற்றிய கப்டனின் தங்கக் கடிகாரம் மிக உயரிய விலைக்கு ஏலத்தில் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.


1912 ஆம் ஆண்டு ஏற்பட்ட டைட்டானிக் கப்பல் விபத்தின் போது உயிருக்கு போராடிய நூற்றுக்கணக்கானோரை உயிருடன் மீட்ட கப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரானுக்கு பரிசளிக்கப்பட்ட "தங்க சட்டைப் பை கடிகாரமே" இவ்வாறு விற்பனையாகியுள்ளது.

ஏலத்தில் மிக உயரிய விலையான £1.56 மில்லியனுக்கு விற்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1912 ஆம் ஆண்டு ஏற்பட்ட டைட்டானிக் கப்பல் விபத்தின் போது உயிரிழந்த 3 பணக்கார தொழிலதிபர்களின் விதவை மனைவிகளால் கப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரானுக்கு பரிசளிக்கப்பட்டது.

டைட்டானிக் கப்பல் பனிப்பாறைகள் மீது மோதி விபத்தில் சிக்கியது தொடர்பான அவசர செய்தியை கேட்ட உடன் விரைந்து செயற்பட்டு, தனது கார்பதியா கப்பலை திசை திருப்பி நூற்றுக் கணக்கானோரை கப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரான் காப்பாற்றி இருந்தார்.

இந்நிலையில், டைட்டானிக்கின் மிகப்பெரும் நினைவலைகளை சுமந்துள்ள இந்த கடிகாரம், ஹென்றி ஆல்ட்ரிட்ஜ் அண்ட் சன் என்ற நிறுவனத்தால் அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் சேகரிப்பாளருக்கு விற்கப்பட்டுள்ளது.



அத்துடன் இதுவரை ஏலத்தில் விலை போன டைட்டானிக் கப்பல் தொடர்புடைய பொருட்களின் உச்ச மதிப்பை இந்த பைக் கடிகாரம் பெற்றுள்ளது.

ஆர்எம்எஸ் டைட்டானிக் என்ற சொகுசு கப்பல் 1912 ஏப்ரல் 15 அன்று வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் பனிப்பாறையில் மோதி மூழ்கியது. சவுத்தாம்ப்டனில் இருந்து நியூயோர்க் நகரத்திற்கு தனது முதல் பயணமாக சென்று கொண்டிருந்தபோது நடந்த இந்த விபத்தில் 1,500 இற்கும் மேற்பட்டோர் இறந்தனர்.

இது வரலாற்றில் மோசமான கடல் விபத்துகளில் ஒன்றாக கருதப்படுகிறது. டைட்டானிக் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட வயலின், 2013 இல் ரூ.11.65 கோடிக்கு விற்கப்பட்டது.


"இந்த வயலின் தான் 11 ஆண்டுகளாக செலுத்தப்பட்ட அதிகபட்ச தொகை என்ற சாதனையைப் படைத்திருந்தது.

தற்போது இந்த தங்க கடிகாரம் ரூ.16.50 கோடிக்கு ஏலத்தில் விற்பனையாகி புதிய சாதனை படைத்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தின் பலவீனமே ஐ.ம.ச வீழ்ச்சிக்கு காரணம்

## சரத் பொன்சேகா



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தை சஜித் பிரமேதாச முறையாக நிர்வகிக்காததன் காரணமாகவே இன்று அந்தக் கட்சிக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக மாத்திரமின்றி எதிர்க் கட்சி தலைவராகவும் சஜித் பிரேமதாச உரிய முறையில் செயற்படவில்லை என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவத்தில் காணப்பட்ட பலவீனத்தின் காரணமாகவே நான் அக்கட்சியிலிருந்து விலகினேன். அதே போன்று மேலும் பல சிரேஷ்ட உறுப்பினர்களும் கட்சியை விட்டுச் சென்றனர். அவர் வகித்த இரு பதவிகளிலும் முறையான நிர்வாகத்தில் ஈடுபடவில்லை.

எனவே அந்தக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் விரும்பினால் ஹர்ஷ டி சில்வாவை தலைவராக தெரிவு செய்வதிலும் தவறில்லை. சஜித் பிரேமதாசவின் தலைமையில் இவர்களால் பலமானதொரு எதிர்க்கட்சியாக செயற்பட முடியாது.

மாற்று வழியொன்று இல்லாததன் காரணமாகவே மக்கள் தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்துள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிலிண்டருக்கு வாக்களித்தவர்கள் கூட இம்முறை தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்துள்ளனர். இனியாவது ஐக்கிய மக்கள் சக்தி பிரதான எதிர்க்கட்சியாக அதன் பொறுப்பை முறையாக நிறைவேற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 150 | 250 | 100-120 | 160 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 185 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 400 | 180-280 | 300 |
| தக்காளி | 300 | 330 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 250 | 100-150 | 160 |
| கோவா | 180 | 200 | 300 | 350 | 250 |
| கரட் | 150 | 200 | 250 | 200 | 250 |
| பூசணி | 100 | 120 | 150 | 100-110 | 160 |
| புடோல் | 100 | 180 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 130 | 60-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 300 | 250 | 300 | 350 |
| பாகற்காய் | 600 | 550 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 120 | 100 | 100 | 80-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 150 | 130 | 200 |
| பயற்றங்காய் | 160 | 140 | 100 | 150 | 300 |
| லீக்ஸ் | 180 | 250 | 220 | 300 | 300 |
| பீற்றூட் | 150 | 160 | 300 | 100 | 300 |
| கறிமிளகாய் | 500 | 600 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | 150-200 | 400 |
| போஞ்சி | 300 | 500 | 550 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 150 | -- | 140 |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 150 | 60-80 | 120 |
| தேசிக்காய் | 400 | 800 | 1000 | 600-900 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-150 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 1500 |
| வெங்காயப்பூ | -- | 450 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 200 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 100 | 100 | 60 |
| ஈரப்பலா | -- | 200 | 100 | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 267



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## நிதானம்

தானத்திலே சிறந்த தானம் எது என்று ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு தானத்திலே சிறந்த தானம் நிதானம் என்று அதற்கு பதில் சொல்பவர்களும் உண்டு. நிதானம் மிகவும் அவசியம். அதுவும் இன்றைய உலகத்திலே மிக மிக அவசியம். இன்றைய உலகம் மிகவும் பரபரப்பாக போய்கொண்டி ருக்கின்றது. பொறுமையாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்களாலே கூட அப்படி இருக்க முடிவதில்லை.

பொறுமையை சோதிப்பதைப் போன்று பல சம்பவங்களை எல்லாம் சந்தித்தே தீர வேண்டும். எங்கே போனாலும் வரிசையில் நிற்க வேண்டியதாக இருக்கிறது. எங்கே போனாலும் காத்திருக்க வேண்டியதாக இருக்கின்றது. அலுவலகத்திலேயோ, வீட்டிலேயோ கூட நீங்கள் நிதானமாக, பொறுமையாக இல்லை என்றால் சிடுமூஞ்சி, முசுடு இப்படியெல்லாம் பெயர் வைத்து விடுவார்கள் சார். அது உங்களுக்கு தேவையா?சரி வாழ்க்கை யிலே பொறுமைசாலி என்று பெயர் வாங்குவதற்கு என்ன வழி? முதல் விடயம். நீங்கள் நினைப்பது,எதிர்பார்ப்பது, செய்வது எல்லாமே நூறு சதவீதம் சரியாக நடக்க வேண்டும் என்று ஆசைப்படக் கூடாது. எதுவாக இருந்தாலும் அதிலே ஓரளவுக்கு தவறு நடக்கலாம் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருங்கள். ஓரளவுக்கு அதை அனுமதியுங்கள்.

ஒரு நண்பரை ஆறு மணிக்கு ஒரு இடத்திற்கு வர சொல்லியிருக் கின்றீர்கள். ஆறு மணிக்கு அவர் வரவில்லை. உடனே பொறுமையை இழக்க ஆரம்பித்து விடக் கூடாது. ஒரு பத்து நிமிடம் தாமதம் ஆகலாம். அவர் வருகின்ற வழியிலே பேருந்து கூட ஏதாவது நெரிசலிலே மாட்டியிருக்கலாம். அதையெல்லாம் எதிர்பார்த்து கொஞ்சம் காத்திருப்பதிலே தவறில்லை.

சில சமயம் தாமதம் ஆவது கூட நல்லதாக முடியலாம். ஒரு பேருந்தை தவற விடுகின்றீர்கள். ஐயோ ஒரு இரண்டு நிமிடத்திற்கு முன்னாலே வந்திருந்தால் அதை பிடித்திருக்கலாமே என்று நினைக்க வேண்டாம். அடுத்ததாக வருகின்ற பேருந்து நீங்கள் போக வேண்டிய இடத்திற்கே கொண்டு போய் விடுகின்ற பேருந்தாகக் கூட இருக்கலாம். சில நெருக்கடியான சூழ்நிலைகளை இலகுவாக எடுத்து கொள்ளவதற்கு பழகிக் கொள்ள வேண்டும். சில இடங்களுக்கு போகின்ற போது காத்திருப்பதற்கு நம் மனதை தயார் படுத்திக்கொண்டே போக வேண்டும்.ஒரு ரயிலிற்கோ, பேருந் திற்கோ அல்லது விமானத்திற்கோ கப்பல் பிரயாணத் திற்கோ போகின்ற போது அங்கே போய் நீங்கள் மணிக்கணக்கிலே கூட காத்திருக்கத் தான் வேண்டும். புறப்படுகின்ற நேரம் கூட மாறலாம். நீங்கள் போய் சேர்ந்ததும் அது உடனே புறப்பட வேண்டும் என்று கட்டாயமா என்ன? அது மாதிரி சமயத்திலே படிப்பதற்கு சில சுவாரஸ்யமான புத்தகங்களை கையிலே எடுத்துக் கொள்ளுங்கள். உங்க ளைச் சுற்றி எவ்வளவு சுவாரஸ்யமான விடயங்கள் நடந்து கொண்டிருக்கும் அவற்றையெல்லாம் வேடிக்கை பாருங்கள் சார்.

எதற்காக காத்திருக்கின்றோமோ அந்தக் காரியத்திலே உண்மையா கவே நமக்கு ஒரு அக்கறை இருந்தால் நமக்கு bore அடிக்காது. சில கோயில்களிலே பார்த்திருப்பீர்கள். தரிசனத்திற்காக பக்தர்கள் நாள் கணக்கிலே காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எல்லாம் அலுத்துக் கொள்வதில்லை. ஆண்டவனை தரிசிக்க வேண்டும் என்கின்ற உண்மை யான அக்கறை இருப்பதனாலே அவர்களுக்கு bore அடிப்பதில்லை.

சில சினிமா வரிசைகள் கூட அப்படித்தான். இரவு ஆறு மணி ஆட்டத்திற்கு காலை ஆறு மணிக்கே போய் நின்றுவிடுவதில்லையா? இன்னொரு முக்கியமான விடயத்தை நாம் பழகிக்கொள்ள வேண்டும். Live for the movement என்கின்றார்கள் நிபுணர்கள். நினைப்பேர் எப்படி என்றால் அடுத்ததாக நடக்கப் போகின்ற விடயத்திலே கவனமாக இருப்பார்கள். அந்த நினைப்பிலேயே இந்த நிமிடத்தை பொறுமையில்லாமல் கழிப்பார்கள்.

ஒருவர் இருக்கிறார். அவர் எப்படி என்றால் அலுவலகம் முடிவ தற்குள்ளேயே சார் 5 மணிக்குள்ளே எல்லாம் ஆயத்தமாக இருங்கள். நாங்கள் அந்த ஹோட்டலுக்கு போய் சாப்பிட வேண்டும் என்று 4 மணியிலிருந்தே சொல்லிக் கொண்டிப்பார். 4.55 மணிக்கே பரபரப்பாக வருவார். இரண்டு பேரும் புறப்படுவோம். ஹோட்டலுக்கு போவோம். சாப்பிட்டுக் கெண்டிருக்கும் போதே சார் சாப்பிட்டு முடிந்ததும் நேராக ஒரு ஜவுளிக்கடைக்கு போவோம் என்று பரபரப்பாக சாப்பிட்டு புறப்படுவார்.

ஜவுளிக்கடையிலே அவசர அவசரமாக பில் போடுங்கள் சார். சினிமாவிற்கு நேரம் போகின்றது என்பார். சினிமா தியேட்டரிலே உட்கார்ந்து கொண்டு அடுத்தபடியாக எங்கே இரவு உணவை உண்ணலாம் என்று யோசித்துக் கொண்டிருப்பார். இரவு நித்திரையிலும் நாளை காலை எழுந்ததும் அதை செய்ய வேண்டும். இதை செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டிருப்பார். எப்போதுமே அடுத்த நிமிடம், அடுத்த நாள், அடுத்த வாரம், அடுத்த வருடம் இது தான் அவர் சிந்தனை. இந்த நிமிட சந்தோஷத்தை அவர் இழந்து விட்டார். அதனாலே வாழ்நாள் முழுவதும் பொறுமை இன்மை, அவஸ்தை, அல்லல். அதனாலே நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் நிதானமாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக இந்த நிதானத்தை வேறு விதமாக அரத்தம் செய்து கொள்ளக் கூடாது.

ஒருவர் அப்படி தான் ஒரு தடவை அவர் குதிரை காணாமல் போய்விட்டதாம். அதற்காக அவர் கவலைப்படவில்லை. நிம்மதியாக இருந்தார். சந்தோஷமாக இருந்தார். என்ன சார் உங்கள் குதிரை திருட்டு போய்விட்டது நீங்கள் கவலைப் படாமல் இருக்கின்றீர்கள் என்று கேட்டார். அதற்கு இவர் நல்ல வேளை சார். கட்டியிருந்த குதிரை காணாமல் போயிருக்கின்றது. நான் அதன் மேலே உட்காந் திருக்கின்ற சமயத்திலே அது திருட்டுப் போயிருந்தால் நானும் சேர்ந்து காணாமல் போயிருப்பேன் என்றாராம். மிகவும் நிதானம் தவறாத ஆள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி புனரமைப்பு வேலையை துரிதப்படுத்த நடவடிக்கை எடுங்கள்



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதான வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் விடப்பட்டுள்ளமையால் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியின் வெலிக்கண்டல் சந்தியிலிருந்து கண்டாவளை செல்லும் பிரதான வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் விடப்பட்டுள்ளன.

மழைகாலம் ஆரம்பமாகி உள்ளதால் புனரமைப்பு வேலை இடம்பெறாத பகுதிகள் குன்றுங்குழியுமாக காணப்படுவதுடன் வெள்ள நீரும் தேங்கியுள்ளது.

இதனால் குறித்த வீதியால் பயணிப்போர் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே இடைநடுவில் விடப்பட்ட திருத்த வேலைகளை உரிய தரப்பு அதிகாரிகள் துரிதப்படுத்துமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-8-315)

# வன்னி மாவட்ட எம்.பி ஆகிறார்

## உபாலி சமரசிங்க



(குருமன்காடு)

தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியில் ஊடாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக உபாலி சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி தனது 18 தேசியப் பட்டியல்களுக்கும் உரிய பாராளுமன்ற உறுப்பினர்களது பெயரை வெளியிட்டிருந்தது.

அதில் வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்டு தோல்வியடைந்த வவுனியா, மடுகந்தையில் வசிக்கும் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளரும் கட்சியின் நீண்டகால உறுப்பினருமான உபாலி சமரசிங்க பெயரும் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-250)

# வவு.கலைமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்ற தமிழ் மொழித்தின விழா

(குருமன்காடு)

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் தமிழ் மொழித் தின விழா பாடசாலையின் முதல்வர் இ.தமிழகன் தலைமையில் இடம்பெற்றது.



இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வவுனியா தெற்கு வலய தமிழ் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் த.மதியழகன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில், வவுனியா தெற்கு வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் த.நிறைமதி, ஓய்வு பெற்ற ஆசிரியர்களான திருமதி இ.நித்தியானந்தம், திருமதி சி.கலைமதி, பாடசாலை உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, மாணவர்களது தனி, குழு நிகழ்வுகளும், பேச்சு, கவிதை, பாடல்கள், பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது. (6-8-250)

# இடிந்து வீழ்ந்த நீர்ப்பாசன வாய்க்கால்



(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் கடந்த 2018 ஆம் ஆண்டு இபாட் திட்டத்தின் கீழ் பிரதான நீர்ப்பாசன வாய்க்காலில் அமைக்கப்பட்ட கொங்கிறீட் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளது.

முரசுமோட்டை ஊரியான் ஆகிய பகுதிகளுக்கு நீரை கொண்டு செல்லும் பிரதான வாய்க்காலில் 2018 ஆம் ஆண்டு இபாட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கொங்கிறீட் சுவர்களே இவ்வாறு இடிந்து விழுந்துள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர். (6-8-315)

# கையூட்டு பெற்ற பொலிஸார் கைது

(தருமபுரம்)

லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் கைது.

பூநகரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கடந்த சனிக்கிழமை மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரிடம் பலவந்தமாக லஞ்சம் பெற்றதை அடுத்து சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிள் சாரதி கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக குறித்த உத்தியோகத்தர் பூநகரி சங்குப்பிட்டிப் பாலத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளை பொலிஸ் உதவி அத்தியட்சகர் பிரிவினரால் பதினைந்தாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபரை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பொழுது 14 நாட்கள் தடுப்பு காவலில் வைக்குமாறு நீதவான் உத்தரவுக்கு அமைவாக பொலிஸ் உத்தியோகத்தர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(6-8-316)

# மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் இருவர் படுகாயம்

(தருமபுரம்)

ஏ - 35 பிரதான வீதியில் நேற்று இடம் பெற்ற மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பரந்தன் பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு பகுதியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் விசுவமடு பகுதியில் இருந்து தருமபுரம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-8-316)



மண்ணுக்காக மரணித்த மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் விசுவமடு பகுதியில் நடைபெற்றது. இதன்போது மாவீரர்களின் நினைவாக மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.

(படங்கள்: தேவானந்தன்)



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் அக்கராயன் கரித்தாஸ் குடியிருப்பு பகுதி மக்களுக்கு நேற்று முன்தினம் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 634





கொடும்பாளூர் வானதியை இந்த நாட்டில் யாரும் எதுவும் செய்யத் துணிய மாட்டார்கள். அதிலும் இளையபிராட்டியின் அன்புக்குகந்த தோழி நான் என்பது யாருக்கும் தெரியாது? ஒரே ஒரு காரியத்துக்கு மட்டும் அனுமதி கொடுங்கள். போகும் போது அந்தக் குடந்தை ஜோதிடரின் வீட்டுக்கு இன்னொரு தடவை போய் அவரைச் சில விடயங்கள் கேட்க விரும்புகிறேன். அவ்விதம் செய்யலாமா?"

அவரிடம் எனக்குக்கூட வரவேண்டும் என்று ஆசைதான். ஆனால் நீ இவ்வளவு அவசரப்படுகிறாயே?"

இல்லை, அக்கா! இந்தத் தடவை அவரை நான் தனியாகப் பார்த்து ஜோதிடம் பார்க்க விரும்புகிறேன்"

குந்தவை மூக்கின்மீது விரலை வைத்து அதிசயப் பட்டாள். இந்தப் பெண் ஒரு நாளில், ஒரு ஜாம நேரத்தில், இவ்வளவு பிடிவாதக்காரியாக மாறி விட்டது எப்படி என்று இளவரசிக்குப் புரியவேயில்லை. அவள் பிரயாணத்தைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற முடிவுக்கு வந்தாள்.

"சரி, வானதி! உன் விருப்பம் போலச் செய்யலாம். நீ பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தம் செய். அதற்குள் சிறையிலிருக்கும் அந்த வாணர் குலத்து வீரகுமாரனை விடுதலை செய்துவிட்டு வருகிறேன்" என்றாள்.

## 30 ஆம் அத்தியாயம்
## இரு சிறைகள்

வானதியை விட்டுப் பிரிந்ததும் அரசிளங்குமரி நேரே பழையாறைச் சிறைச்சாலைக்குச் சென்றாள். காவலர்களை வெளியிலேயே நிறுத்திவிட்டுத் தான் மட்டும் வந்தியத்தேவன் அடைபட்டிருந்த இடத்துக்குப் போனாள். அவன் தனி அறையில் பூட்டப்பட்டிருந்தான். சிறையின் உச்சியைப் பார்த்துக் கொண்டு உற்சாகமாகத் தெம்மாங்கு பாடிக் கொண்டிருந்தான்.

"வானச் சுடர்கள் எல்லாம்
மானே உந்தனைக்கண்டு
மேனி சிலிர்க்குதடி-
மெய்மறந்து நிற்குதடி!

குந்தவை அருகில் வந்து நின்று தொண்டையைக் கனைத்த பிறகுதான் அவளைத் திரும்பிப் பார்த்தான். உடனே எழுந்து நின்று, "வருக! வருக! இளவரசியாரே! வருக! ஆசனத்தில் அமருக!" என்று உபசரித்தான். "எந்த ஆசனத்தில் அமரட்டும்?" என்று இளவரசி கேட்டாள்.

"இது தங்கள் அரண்மனை. இங்கு நடப்பது தங்கள் ஆட்சி, தங்கள் ஆணை. இங்குள்ள சிம்மாசனம் எதில் வேண்டுமானாலும் தங்கள் விருப்பம் போல் அமரலாம்" என்றான் வல்லவரையன்.

"ஐயா! உமது முன்னோர்கள் ஆணை செலுத்தி மூவுலகையும் ஆண்டபோது வல்லத்து அரண்மனை இவ்விதந்தான் இருந்தது போலும்! எங்கள் நகரில் இந்த இடத்தைச் சிறைச்சாலை என்று சொல்லுவார்கள்" என்றாள் இளவரசி.

"அம்மணி! எங்கள் ஊரில் இப்போது அரண்மனையும் இல்லை. சிறைச்சாலையும் இல்லை. பல தேசத்து அரசர்களுமாகச் சேர்ந்து அரண்மனை, சிறைச்சாலை எல்லாவற்றையும் இடித்துத் தரைமட்டமாக்கி விட்டார்கள். நூறு வருடங்களுக்கு முன்பு

"ஏன்? ஏன்? வல்லத்து அரண்மனை மீதும் சிறையின் பேரிலும் அவர்களுக்கு என்ன அவ்வளவு கோபம்? எல்லாம் ஒரு கவிஞரால் வந்த வினை!"


"ஆ! அது எப்படி?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## போகவிட்டு புறம் சொல்லித் திரிய வேண்டாம்



ஒரு கோவிலுக்கு அருகில் பெரிய குளம் இருந்தது. அந்த குளத்திலே ஒரு பக்கம் தாமரைக் கொடிகளும் எதிர்ப்பக்கம் அல்லிக் கொடிகளும் வளர்ந்திருந்தன.

அந்த குளத்திலே கெண்டை, கெளுத்தி, விரால், குரவை, தவளை, நண்டு, நத்தை, ஆமை, தண்ணீர் பாம்புகள் என்று நீரில் வாழும் உயிரிணங்கள் நிறைய இருந்தன. அதில் விலாங்கு என்கிற மீனும் இருந்தது.

இந்த விலாங்குமீன் தந்திரம் தெரிந்த மீன். இதன் தலை பாம்பு போல இருக்கும். வால் பகுதி மீன் போல இருக்கும். பாம்புகளிடமிருந்து தப்பிக்க பாம்புகளிடம் தலையைக்காட்டி தப்பித்து விடும்.

மீன் கூட்டத்திற்கு தன் வாலைக் காட்டி மீன் கூட்டத்தில் சேர்ந்துகொள்ளும். இந்த தந்திரத்தாலே இது மீன் கூட்டத்திலும், பாம்புக் கூட்டத்திலும் சேர்ந்து இருக்கும்.

இதனால் தன்னை ஒரு அறிவாளியாக எண்ணிக் கொண்டு நீரில் வாழும் மற்ற உயிரினங்களைப் பற்றி அவை இல்லாதபோது மிகவும் தாழ்வாகப் பேசும். பெரும்பாலும் சேற்றில் மறைந்து கொள்ளும்.

ஏதாவது பாம்பைக் கண்டால் அண்ணே, வணக்கம் என்று கூழைக் கும்பிடு போடும்.

அந்தப் பாம்பு நகர்ந்து சென்றதும் இது கொஞ்சமும் நஞ்சு இல்லாத தண்ணீர்ப் பாம்பு. இது கடித்தால் யாரும் சாகவே மாட்டார்கள் ஆனாலும் பாம்பு என்கிற பெருமைக்கு ஒன்றும் குறைச்சலில்லை என்று அதைப்பற்றி இழிவாகப் பேசும்.

கொக்கு கொத்தி மீனை பார்த்தால், எல்லா மீனையும் கொத்திச் சாப்பிடும். நாரை, கொக்கு எல்லாம் உனக்குத் தாடையில் முள் இருப்பதால் உன்னைக் கொத்தாமல் பயந்து ஓடிவிடும் என்று புகழ்ந்து பேசும். அது நகர்ந்து போனதும், "இதெல்லாம் கொக்கு கூட விரும்பாத ஒரு பிறவி" என்று மற்ற மீன்களிடம் கேலி பேசும்.

எதிரே நண்டு வருவதைக் கண்டால், "நண்டு நண்பா, உன்னைப்போல். எனக்கும் கொடுக்கு இருந்தால் எல்லோரும் என்னைப் பார்த்து பயப்படுவார்கள்" என்று பயப்படுவது போல கூறும். அது சென்றதும்,

"கொடுக்கு இருந்தால் மட்டும்போதுமா? இது தலையே இல்லாத முண்டம்தானே. தலையில் லாட்டி மூளை எப்படி இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கும், பிறருக்கும், கடவுளுக்கும் என்றும் உண்மையாய் இருப்போம். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்...

மெய்ப்பொருள் காண்பவன் அறிஞன். தன்னை உணர்பவன் ஞானி. அதனாலோ என்னவோ உன்னையே நீ அறிவாய் என்றார் தத்துவஞானி சோக்கிரட்டிஸ்.

ஆக, இவ்வுலகப் பிரபஞ்சத்தில் நடக்கின்ற ஒவ்வொரு சம்பவங்களும் உலக மானிடத்துக்கு மெய்ஞானத்தைப் போதிப்பவை.

இருந்தும் எமக்குள் இருக்கக்கூடிய மமதையும் அறிவை மறைத்து நிற்கும் பொய்மையும் சேர்ந்து மனிதர்களைப் பாழாக்கி விடுகின்றன.

ஆம், இந்த உலகம் எத்தனை பெரும் பேரரசுகளைக் கண்டுற்றது.

இன்று அந்தப் பேரரசுகள் அடி அத்திபாரம் தெரியாமல் மறைந்து போயின.

எனினும் அந்த உண்மையை உணராதவர்கள் தமக்குக் கிடைத்த பதவிகளை நிலையானதென நினைத்து, அகந்தை கொண்டு அநீதி இழைக்கின்றனர். அதர்மம் செய்கின்றனர்.

ஆம், இதற்கு நல்ல உதாரணம் நம் நாட்டு அரசியலாகும். இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு எதிரான போரைத் தொடுத்தார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் அவர் நடத்திய தமிழின அழிப்பில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பலரைக் காணாமல் ஆக்கினார். 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வன்னி யுத்தத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அந்நேரம் வெளிநாட்டில் இருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உடனடியாகத் தாயகம் திரும்புகிறார். விமானத்தால் இறங்கியதும் மண்ணை விழுந்து வணங்குகிறார்.

ஜனாதிபதி மாளிகையில் ஆட்சி அதிகார மமதையில் மகிந்த ராஜபக்ஷ அமர்ந்திருக்க, விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டுவிட்டனர். வன்னிப் போரில் நாம் வெற்றி பெற்று விட்டோம் என்ற தகவலை அன்றைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அறிவிக்கின்றார்.

அன்றைய பாதுகாப்பு செயலாளரும் மகிந்த ராஜபக்ஷவின் தம்பியுமான கோட்டாபய ராஜபக்ஷ, அண்ணன் மகிந்தவை கட்டியணைத்து ஆரத்தழுவி போர் வெற்றியைப் பகிர்ந்து கொள்கின்றார்.

இவை அங்கு நடக்க, இங்கு இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக முட்கம்பி வேலிக்குள் அடைபட்டு – வதை பட்டு ஏங்கி நிற்கின்றனர்.

என்னே கொடுமை! போர் வெற்றிக்காக காலிமுகத்திடல் களை கட்டுகிறது. இங்கோ பெற்றோரை இழந்த குழந்தைகள் விம்மி விம்மி அழுகின்றன.

இனி இலங்கையின் ஆட்சி எமக்கே என்று ராஜபக்ஷக்கள் கர்வம் கொள்கின்றனர். ஈற்றில் நடந்தது என்ன? என்பதை யாம் கூறி நீங்கள் யாரும் அறிய வேண்டிய தேவை இல்லை.

இப்போதுகூட, மொட்டுக்கட்சி வெறும் மூன்று ஆசனங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இதைத்தான் அதிவீரராம பாண்டியர் சொல்கிறார்.

**குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்** என்று.

ஆம் குடை, நிழல் தர யானையில் இருந்து ஊரெல்லாம் பவனி வந்தோர்; ஒரு நாள் நடை தளர்ந்து ஓர் ஊருக்கு மெல்ல மெல்ல அடியெடுத்துச் செல்லுகின்ற நிலையும் வந்தேகும்.

இதை எவரும் மறந்துவிடாதீர்கள்.

# குழந்தைகளிடையே அதிகரிக்கும் காய்ச்சல், வைரஸ் தொற்று

## குழந்தைகள் நல மருத்துவ ஆலோசகர் தீபால் பெரேரா

(கொழும்பு)

குழந்தைகள் மத்தியில் காய்ச்சல் அறிகுறிகள் அதிகரித்து வருவதுடன், வைரஸ் தொற்று மற்றும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல மருத்துவ ஆலோசகர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இருமல், சளி, உடல் வலி மற்றும் அவ்வப்போது வாந்தி உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் அறிகுறிகள் பொதுவாக பாதிக்கப்பட்ட குழந்தைகளில் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

குறிப்பாக மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால், குழந்தைகளின் அறிகுறிகளை உன்னிப்பாக அவதானித்து உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறு பெற்றோருக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

எனினும் பாடசாலை மாணவர்களிடையே கை, கால் மற்றும் வாய்ப் பகுதிகளில் புண்கள் (சொறி) அதிகரித்து வருவதாக வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளுக்கு உள்ளங்கைகள் மற்றும் கால்களில் சிறிய வெள்ளை கொப்புளங்கள் போன்ற அறிகுறிகள் இருந்தால், அதே போல் வாயில் பழுப்பு நிற செதில்களுடன் சிவப்பு தோல் வெடிப்பு இருந்தால், பெற்றோர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் சுகாதார அதிகாரிகள் கேட்டுக் கொள்கிறார்கள்.

இந்த அறிகுறிகளில் சில இன்ஃப்ளுவன்ஸாவின் அறிகுறிகளுடன் தொடர்புடையதென தெரிவிக்கப்படுகிறது, இதனால் பெற்றோர்கள் விழிப்புடன் இருப்பது மற்றும் காய்ச்சல் தொடர்ந்தால் மருத்துவ ஆலோசனையைப் பெறுவது முக்கியம்.

மேலும், டெங்கு நோய் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத வகையில் இரத்தப் பரிசோதனைகளை செய்துகொள்ளவும் பெற்றோருக்கு வலியுறுத்தியுள்ளார். (ம-7)

# 2 மில்லியன் சுற்றுலாவிகள் வருட இறுதிக்குள் வருவார்கள்

## சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நம்பிக்கை

இந்த வருட இறுதிக்குள் 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை இலங்கை அடையும் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் அறுகம்பே பகுதிக்கு விடுக்கப்பட்டிருந்த தாக்குதல் எச்சரிக்கையைத் தொடர்ந்தும் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்திருந்தது.

குறித்த எச்சரிக்கையைத் தொடர்ந்து பல நாடுகள் இலங்கைக்கான பயண ஆலோசனையைப் புதுப்பித்திருந்ததுடன் சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்புத் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், ஒப்பீட்டளவில் இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சுற்றுலாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

# யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(பொலநறுவை)

பொலநறுவை, அரலகங்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எல்லேவெவ பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அரலகங்வில பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பொலநறுவை எல்லேவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய முதியவர் ஆவார்.

இந்த முதியவர் காட்டு யானை தாக்கிக் காயமடைந்த நிலையில் அரலகங்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# களனி கங்கையில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, முல்லேரியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட களனிமுல்ல சந்திக்கு அருகில் களனி கங்கையில் மிதந்த நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக முல்லேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்த விதத் தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

40 முதல் 50 வயது மதிக்கத்தக்க நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமானது கொழும்பு ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# கட்டடம் ஒன்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(காலி)

காலி, கொனபீனுவல பிரதேசத்தில் அமைந்துள்ள விற்பனை நிலையம் ஒன்றிற்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றிலிருந்து நேற்றுத் திங்கட்கிழமை (18) காலை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கொனபீனுவல பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்த வித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

40 வயது மதிக்கத்தக்க 05 அடி 04 அங்குலம் உயரமுடைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமானது கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

ஓடும் பஸ்ஸின்

# மிதி பலகையிலிருந்து வீழ்ந்த பஸ் நடத்துனர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடுவலை - கொள்ளுப்பிட்டி வீதியில் கொஸ்வத்த சந்திக்கு அருகில் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் மிதி பலகையிலிருந்து கீழே தவறி வீழ்ந்து பஸ் நடத்துனர் உயிரிழந்துள்ளதுடன் பயணி ஒருவர் காயமடைந்துள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பஸ் நடத்துனரும் காயமடைந்த பயணியும் பஸ்ஸின் பின்புறத்தில் உள்ள மிதிபலகையில் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென பஸ்ஸின் மிதிபலகையிலிருந்து கீழே தவறி வீழ்ந்துள்ளனர்.

இதனையடுத்து, காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பஸ் நடத்துனர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பதுளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 01 - 30, 2024**

**"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்"**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசியப் பட்டியல் எம்.பியாக யாரை நியமிக்க முடியும்?

## தேர்தல் ஆணைக்குழு விளக்கம்




(கொழும்பு)

தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு ஏற்கனவே கட்சிகளால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் அல்லது சமீபத்திய பொதுத் தேர்தலில் நின்று தெரிவு செய்யப்படாத வேட்பாளர்கள் மட்டுமே தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக பாராளுமன்றத்திற்கு பெயரிட முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கப்பால் புதிதாக பெயரிடப்பட்டு தேசியப்பட்டியல் எம்.பிக்களாக வேறு எவரும் பாராளுமன்றத்தில் பிரவேசிக்க முடியாது எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)

# அரிசி இறக்குமதிக்கு விடுக்கப்பட்ட கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் அரிசி பிரச்சினையை தீர்க்கும் வகையில், இரண்டு மாதங்களுக்கு தேவையான அரிசியை இறக்குமதி செய்யுமாறு அகில இலங்கை அத்தியாவசிய உணவு மொத்த மற்றும் சில்லறை விற்பனை சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை ஒருசில அரிசி வியாபாரிகளை பாதுகாக்காமல் மக்களைப் பற்றி அரசு சிந்திக்க வேண்டும்.

இதேவேளை இன்று சந்தையில் வெள்ளை அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சில பல்பொருள் அங்காடிகள் வெள்ளை அரிசி விற்பனையை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன.

இதன்படி நாளொன்றுக்கு 3 கிலோவுக்கு மேல் அரிசி கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் இல்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-8)

# தோல்விக்கான காரணத்தை வெளியிட மறுக்கும் சஜித் அணி



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தோல்விக்கான சில காரணங்களை வெளியிட முடியாது என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் எங்கள் தோல்விக்கான சில காரணங்களை மூடிய கதவுகளுக்குப் பின்னால் கட்சியின் மற்றைய உறுப்பினர்களுடன் மட்டுமே விவாதிப்போம் என்று தெரிவித்தார்.

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஏன் பொது மக்களிடம் இருந்து விலகி நிற்கிறார் என்று கேட்டதற்கு, சரியான நேரத்தில் பிரேமதாச பொது வெளியில் வருவார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் 35 ஆசனங்களை பெற்று படுதோல்வியடைந்த ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் எதிரணியில் அமரவுள்ளது. பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் சஜித் பிரேமதாச இதுவரை பொதுவெளியில் தோன்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3262

### மிதுஷன்




### ஐங்கரன்




### அகல்யா




### தனுஷன்




### தனுகா




### டிலக்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுர அமைச்...

சுப் பதவி வழங்கப்படவில்லை.

எனினும் தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஆபூபக்கர் ஆதம்பாவா என்பவர் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## ஜனாதிபதி...

நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

## நாட்டில்...

அதன்படி, இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதிக்குள் 44,000 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 11,078 ஆகும்.

கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்தும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகச் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## இலங்கைக்கான...

முதலாவது இராஜதந்திரியாக யாழ்ப்பாணத்துக்கு சீனத் தூதுவர் இரண்டு நாட்கள் விஜயம் மேற்கொள்கின்றார்.

இதன்போது அவர் பல தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.(ம-7)

## இராணுவ...

இராணுவ முகாம் அமைந்துள்ள காணியிலிருந்து வெளியேறுமாறு இராணுவ தலைமையகம் அறிவித்துள்ள நிலையில் இராணுவ முகாமிலிருந்து வெளியேறும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

குறித்த இராணுவ முகாம் அமைந்துள்ள காணியிலிருந்து இராணுவத்தை வெளியேறுமாறு பல அரசியல் கட்சிகள் இணைந்து போராட்டம் நடத்தியிருந்ததுடன் நிலஅளவை செய்வதற்கும் பல தடவைகள் முயற்சிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அநுரவின்...

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர்கள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 21 அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

முதலாவதாக புதிய பிரதமராக ஹரிணி அமரசூரிய பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதனையடுத்து, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் - விஜித ஹேரத்

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் - ஹர்ஷன நாணயக்கார

உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் அமைச்சர் - சந்தன அபேரத்ன

மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம் - சரோஜா சாவித்திரி போல்ராஜ்

விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் - கே.டி. லால்காந்த

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு -அநுர கருணாதிலக

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுதுறை - சுனில் குமார கமகே

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் - இராமலிங்கம் சந்திரசேகரன்

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை - உபாலி பன்னிலகே

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் - சுனில் ஹந்துன்னெத்தி

பொதுமக்கள் பாதுகாப்பு, பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் - ஆனந்த விஜேபால

போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் - பிமல் ரத்நாயக்க

சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் : Dr. நலிந்த ஜயதிஸ்ஸ

புத்தசாசன, சமயவிவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் - பேராசிரியர் ஹினிதும சுனில் செனாவி

பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் - சமந்த வித்யாரத்ன

வர்த்தக, உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் - வசந்த சமரசிங்க

விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியல் அமைச்சர் - பேராசிரியர் கிரிஷாந்த சில்வா

சக்தி வலு அமைச்சர் - குமார ஜயகொடி

சுற்றாடல் அமைச்சர் - கலாநிதி தம்மிக பட்டபதி மற்றும் தொழில் அமைச்சராக - அனில் ஜயந்த பெர்னாண்டோவும் பதவியேற்றுக் கொண்டனர். (ம-7)

## பெண் சபாநாய...

மாணம் இடம்பெற்று பாராளுமன்றம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படும்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு சம்பிரதாயபூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டு ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரைக்காக மீண்டும் காலை 11.30 மணிக்கு பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும்.

இதேவேளை, புதிய சபாநாயகராக பெண் ஒருவரை நியமிக்கும் ஆலோசனைகளை தேசிய மக்கள் சக்தி நடத்தியுள்ளதாக அறிய முடிகிறது.

நாளை 20 ஆம் திகதி ஆளுங்கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தை நடத்த உத்தேசித்துள்ளதுடன், இதன்போது இந்த விடயம் இறுதி செய்யப்படும் எனவும் தெரியவருகிறது.

சபை முதல்வராக அமைச்சர் விஜித ஹேரத்தையும், ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவாக அமைச்சர் லால் காந்தவையும் நியமிக்க தேசிய மக்கள் சக்தி ஆலோசனைகளை நடத்தியுள்ளது.

இதுகுறித்த இறுதி முடிவும் ஆளுங்கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வரணியில்...

குறித்த குழந்தைக்கு 31 அன்று குளிக்கவாக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சளி பிடித்ததைத் தொடர்ந்து பிற்பகல் 3.00 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு குழந்தை உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### மஹஜன சம்பத

திகதி 2024.11.18
சீட்டிழுப்பு இலக்கம் 5659
V 7 1 9 0 3 5

அத சம்பத
V 9 0 3 5
சீட்டிழுப்பு இலக்கம் 234

### தன நிதானய

திகதி - 2024.11.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1689
B 19 25 52 74 B
Double Chance 55483

### மெகா பவர்

திகதி 18/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2007
M 20 10 30 49 71
Double Chance 168574

### லக்கி 7 VIP

திகதி 2024.11.18
சீட்டிழுப்பு இலக்கம் 0485
O 2 9 8 2 1 7 O

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3901
சீட்டிழுப்பு திகதி 18.11.2024
Y 19 42 68 78
Y 088578

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.18
சீட்டிழுப்பு இலக்கம் 968
தனுசு 08 20 27 49 தனுசு
088141 45

### சுப்பர் பல சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்
18.11.2024 வெற்றி வாரம் 367
T 4 3 6 5 9 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,744,124.00

### Super Ball

சீட்டிழுப்பு வாரம் 2633
சீட்டிழுப்பு திகதி 2024.11.18 தினம் திங்கட்கிழமை
10 50 53 59 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,148,066.40

### சனிதா

திகதி 18.11.2024 வெற்றி வாரம் 4794
09 27 66 68 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,603,337.20

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4345
சீட்டிழுப்பு திகதி 18.11.2024 தினம் திங்கட்கிழமை
37 47 51 61 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,058,557.60

### லக்பதி

U 24 49 60 71 72
சீட்டிழுப்பு வாரம் 1809
18.11.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.555,688,270.40

### ஜயோதா (Jayoda)

திகதி 2024.11.18 வெற்றி வாரம் 2078
03 35 49 63 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,363,966.00

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2459
சீட்டிழுப்பு திகதி : 2024.11.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,093,039.20
19 41 62 69 E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டானில் யானை தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

ஒட்டுசுட்டானில் யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் சிவநகர் ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் மகேந்திரராஜா (வயது-61) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 8ஆம் திகதி மழை பெய்து கொண்டிருந்தபோது துவிச்சக்கர வண்டியில் குடை பிடித்த வண்ணம் வயலுக்குச் சென்றுள்ளார்.

இவர் சென்று கொண்டிருந்த போது காலை 6.30 மணியளவில் இத்திநாடு பகுதியில் யானை சஞ்சரிக்கும் இடத்தில் இவரை யானை தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது வீதியால் சென்றவர்கள் குடும்பத்தினருக்கு அறிவித்த நிலையில் உடனடியாக ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதித்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை(17) பகல் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பிலான விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60)

## எல்லையற்ற...

குமார திஸாநாயக்க,

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள எல்லையற்ற அதிகாரத்தை பொறுப்புடன் கையாள வேண்டும்.

எமது வெற்றி மகத்தானது எனவும், வெற்றியினால் எமக்கு வழங்கப்பட்ட பொறுப்பின் எடை அதேஅளவானது எனவும் அதற்காக நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இலங்கையில் பிளவுபடுத்தும் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளோம். இலங்கையின் அரசியல் கலாசாரம் நீண்ட காலமாக வடக்கை தெற்கிற்கு எதிராகவும் அதற்கு நேர்மாறாகவும் நிறுத்தும் முயற்சிகளால் வரையறுக்கப்படுகிறது.

இருப்பினும், பிளவுபடுத்தும் அரசியல் இனியும் ஆட்சி செய்யாது என்பதை இந்தத் தேர்தல் காட்டுகிறது.

இது அனைத்து மக்களின் அபிலாஷைகளையும் வெற்றிகரமாக ஒரே மையத்திற்கு கொண்டு வந்துள்ளது.

இலங்கை புலம்பெயர்ந்தோர் மற்றும் இளம் சமூக ஊடக ஆர்வலர்கள் தேர்தலின் போது ஆற்றிய பங்களிப்புகள் மற்றும் ஆதரவினையும் மேற்கோள்காட்டினார்.

பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதே அரசின் பொறுப்பாகும் என்பதுடன் மக்கள் வழங்கியுள்ள அதிகாரமானது பொறுப்பு வாய்ந்தது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஊழல் அற்ற ஆட்சியை முன்னெடுப்பதே எமது நோக்கமாகும். நாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை அதிகாரம் ஆட்சியாளர்களுக்கு கிடைத்தது.

அதிகாரத்தின் ஊடாக மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். மக்கள் வழங்கியுள்ள அதிகாரமானது பொறுப்பு வாய்ந்தது. மக்களுக்கும் பொறுப்புள்ளது. எந்தவொரு அதிகாரம் வழங்கப்பட்டாலும் அதில் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது என்றார். (ம-7)

## பொதுமக்கள்...

னத்திலெடுக்கும் சமநிலையான அணுகுமுறையான சர்வதேச நாணயநிதியம் பின்பற்றவேண்டும் என ஜனாதிபதி அநுரகுமாரதிஸநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் குழுவினரை சந்தித்தவேளை அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் எதிர்கொள்ளும் கடுமையான நெருக்கடிகளிற்கு தீர்வை காண்பதற்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ள ஜனாதிபதி பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை கவனத்திலெடுக்கும் சமநிலையான அணுகுமுறையை சர்வதேச நாணயநிதியம் பின்பற்றவேண்டும் என தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளிற்கு தீர்வை காண்பதற்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ள ஜனாதிபதி பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை கவனத்திலெடுக்கும் சமநிலையான அணுகுமுறையை சர்வதேச நாணயநிதியம் பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)


## மணப்பெண் தேவை

- சுண்டிக்குழி, இந்து, 1987,திருவோணம், BA(Hons),Business Managment,CIMA, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை - 43,625
- குப்பிளான் - கொக்குவில், இந்து, 1990, கேட்டை, Phd, Director, கனடா,மாப்பிள்ளைக்கு பெண் தேவை - 46 762
- நெல்லியடி, இந்து, 1991, பூராடம்,HND(Jaffna University), USA citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை - 47 452
- காரைநகர் - கோப்பாய், இந்து, 1992, பூரம், Bsc Engineering, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 37 285
- நீர்வேலி, இந்து, 1989, சுவாதி,Phd South Korea citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை - 36,432
- யாழ்ப்பாணம், இந்து, 1986,மகம், M Sc, UK citizen மாப்பிள்ளைக்குபெண் தேவை - 36,814
- புலோலி, இந்து, 1982, சுவாதி,BSc Engineering, Australia citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை - 35 391
- கரவெட்டி - புங்குடுதீவு, இந்து, 1989, மிருகசீரிடம், Bsc UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 38 558

என்னிடம் எல்லா ஜாதியிலும், வெளிநாட்டு, உள்நாட்டு பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு, Unmarried, Divorce, Widower என்பனவும் உண்டு. (2434)

www.thaalee.com
திருமண சேவை
- 077 539 3728
- 077 803 8193



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1614)

076 825 7716 (ஆகாஸ்)



## வேலையாட்கள் தேவை

யாழ். பிரபல உணவகமொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- உணவு பரிமாறுபவர்கள்
- பாசல் கட்டுபவர்கள்
- சமையல் உதவியாளர்கள்

தங்குமிடம்/ உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். (557)

077 407 8235



## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை (Security Officer)

கிளிநொச்சி நகரம், கைதடி, காரைநகர் ஆகிய இடங்களுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை. (555)

தொடர்பு
077 5401 211
071 8417 299



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 18 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன் 1 பரப்பின் விலை 15 இலட்சம் ரூபாய் [ 15 00 000/= ]

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்றவீதி 250m தூரம்
- நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்ல சூழல்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 - மாலை 6.00 வரை

(2453)

077 468 3354, 077 288 0152, 076 739 0413



வலம்புரி விளம்பரத் தொடர்புக்கு 076 636 3378 | 076 097 3127



## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 38,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (556)

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)



## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு : (2415)

075 033 6759



## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை



சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணம்
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK 1400/= France 2300/= Germany 2100/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 208, Galle Road, Colombo 06.
(554) T.P - 077 755 4528



## RAVEENS EMC KARAVEDDY (English Medium)

SPECIAL ENGLISH FOR Gr : 5 (Fundamental)

- 5 ஆம் தர புலமைப் பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கு
- 2025 இல் Gr 6 இல் (English Medium) படிக்க விரும்புபவர்களும்
- 30 Classes (Duration)
- Application Forms are Available
- Closing Date : 22.11.2024(Friday)
- Limited Admissions

(C-1610)

P.Easwaranathan
(Director)
T.P : 021 226 3321



## வீடு வாடகைக்குண்டு

நல்லூர் அரசடி வீதியில் சிறிய குடும்பத்திற்கு மேல் வீடு வாடகைக்குண்டு. (2458)

077 0491 513
076 7062 266



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1615)



## வீடு வாடகைக்கு தேவை

வெளிநாட்டில் இருந்து வந்தவர் வசிக்கக்கூடிய சகல வசதிகளுடன் கூடிய வீடு யாழ். மாவட்டத்தில் வாடகைக்குத் தேவை.
- இணைந்த குளியலறை
- ஏ.சி வசதி

என்பன விரும்பத்தக்கது. (2459)

076 6347 937


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.